# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108504

1. District : Coimbatore PS: Vigilance and Anti Corruption Year: FIR No.: 11/2021/AC/CB Date: 18/3/2021 0745 hrs
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: as amended by the Prevention of Sections பிரிவுகள்: -
(iii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: -
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : Date from : 16.03.2021 Date to : 17.03.2021
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 1700 hrs Time to : 1315 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 18.03.2021 Time : 0715 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 18.03.2021 Time : 0715 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North East about 40 km
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : At the Agricultural land of complainant & wife SF no. 599/3, Kuppanur village, Annur Taluk, Coimbatore District.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. Kanagaraj (b) Father's/ Husband's Name : Ponnusamy Gounder
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 42 yrs (d) Nationality : Indian (e) Passport No. : -
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : - Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Stainless steel fabrication (g) Address : 452, Anaiyur, Kuppanur post, Annur Taluk, Coimbatore District
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) Rajendran, Assistant Engineer, TANGEDCO, Vadakalur, Annur Taluk, Coimbatore District.
2) Elango, Line Inspector, TANGEDCO, Vadakalur, Annur Taluk, Coimbatore District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 18/3/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 18/3/2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court! 18.03.2021.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. Arumugam, Inspector of Police
Rank: நிலை VCPC, No. எண் .......... Coimbatore

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2021/AC/CB, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

இன்று 18.03.2021 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 07.15 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாவட்டம், அன்னூர் தாலுகா, குப்பனூர் அஞ்சல், ஆணையூர், கதவு எண்.452 ல் வசிக்கும் பசுவப்பகவுடர் என்பவரது மகன் திரு.P.கனகராஜ், வயது–42 என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கோயம்புத்தூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திற்கு நேரில் ஆஜராகி கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையிலும், மேலும் எதிரிகளின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகாரில் சொல்லப்பட்டது போல் புகார்தாரரிடம் எதிரிகள் 1) திரு.ராஜேந்திரன், உதவி மின் பொறியாளர் மற்றும் 2) திரு.இளங்கோ, லைன் இன்ஸ்பெக்டர், வடக்கலூர் மின் வாரியம், அன்னூர் வட்டம், கோவை ஆகியோர்கள் புகார்தாரர் மற்றும் அவரது மனைவி பெயரில் உள்ள விவசாய பூமிக்கு தட்க்கல் முறையில் ஆழ்குழாய் கிணற்றுக்கு புதிய விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு லஞ்சமாக பணம் ரூ.15,000/– கேட்டது தெரிகிறது. மேலும் புகார்தாரரின் முன்நடத்தை மற்றும் புகார்தாரருக்கும் எதிரிக்கு இடையே தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் அவரது புகார் நம்பகத்தன்மை கொண்டது என்றும் தெரியவந்தது. மேலும் புகார்தாரரிடம் பொறி வைப்பு நடவடிக்கைக்கு பற்றிய விவரம் கூறி பொறி வைப்பு நடவடிக்கைக்கு விருப்பம் இருப்பின் எதிரிகள் கேட்ட லஞ்ச பணம் ரூ15,000/– கொடுக்கவேண்டி அறிவுறுத்தப்பட்டது. அவரும் தான் பொறிவைப்பு நடவடிக்கைக்கு விருப்பம் தெரிவித்து பணம் ரூ.15,000/– கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அதன் பேரில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 18.03.2021 ம் தேதி காலை 07.45 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2021/AC/CB u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 ன்படி மேற்படி எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு –

அனுப்புநர் P.கனகராஜ், வயது–42, த/பெ. பசுவப்பகவுடர், கதவு எண்.452, ஆணையூர், குப்பனூர் அஞ்சல், அன்னூர் தாலூகா, கோவை. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கோவை. அய்யா, நான் தற்போது கோவை மாவட்டம், அன்னூர் தாலுகா, குப்பனூர் அஞ்சல், ஆணையூர், கதவு எண்.452 ல் எனது மனைவி ரேவதி மற்றும் குழந்தைகளுடன் குடியிருந்து வருகிறேன். நான் DME படித்து விட்டு ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பேப்ரிக்கேஷன் என்ற தொழிலை கோவை கவுண்டர் மில்ஸ் பகுதியில் கடந்த 15 வருடமாக நடத்தி வருகிறேன். கடந்த 23.01.2019 ஆம் தேதி எனது மனைவி ரேவதி மற்றும் எங்கள் சொந்தக்காரர் மலர்கொடி ஆகியோர்களது பெயரில் அன்னூர் வட்டம், குப்பனூர் கிராமம் க.ச.எண்.599/3 ல் 1 ஏக்கர் 90 சென்ட் பரப்பளவில் உள்ள விவசாய பூமியை விலைக்கு வாங்கி கிரையம் செய்துள்ளோம். கடந்த 19.01.2021 ஆம் தேதி எனது சொந்தகாரர் மலர்கொடி என்பவருக்கு சொந்தமான மேற்படி விவசாய பூமி பாகத்தினை அவரிடமிருந்து நான் விலைக்கு வாங்கி என் பெயருக்கு கிரையம் செய்து கொண்டேன். அதில் போர்வெல் ஒன்று போட்டோம். அந்த விவசாய பூமிக்கு தட்க்கல் முறையில் ஆழ்குழாய் கிணற்றுக்கு புதிய விவசாய மின் இணைப்பு பெற வேண்டி கடந்த 10.10.2019 ஆம் தேதி அவினாசி மின் வாரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் எனது மனைவி ரேவதி பெயரில் விண்ணப்பம் கொடுத்தேன். அதில் என்னுடைய மொபைல் நெம்பரும் எழுதி கொடுத்துள்ளேன். அது சம்மந்தமாக மின் இணைப்பு பெற வேண்டி தகவல் கிடைத்ததன் பேரில் கடந்த 21.09.2020 ஆம் தேதி அவினாசி மின் வாரிய செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று எங்களது விவசாய மின் இணைப்பு பற்றி அங்கிருந்த அலுவலரிடம் விசாரித்த போது பணம் ரூ.2,75,000/– ஐ வரைவோலையாக அரசுக்கு செலுத்தவேண்டும் என்று கூறியதன் பேரில் நானும் அதே நாளில் திருப்பூர் HDFC வங்கியில் வரைவோலை எண்.008350 ல் ரூ.2,75,000/– ஐ எடுத்து கொண்டு அவினாசி மின் வாரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் அன்றே செலுத்தி அதற்கான திருப்பூர் மின் பகிர்மான வட்டம் மின் கட்டண ரசீது வரிசை எண்.J0414191 தேதி 21.09.2020 பெற்றுக்கொண்டேன். அதன் பின்பு மின் இணைப்பு கொடுப்பதற்கு தேவையான ஏற்பாடுகளான மின் கம்பம் போடுவதற்கான அளவீடுகளை வடக்கலூர் மின் வாரிய அலுவலகத்தில் இருந்து வந்து எடுத்து சென்றார்கள். இந்நிலையில் கடந்த 12.03.2021 ஆம் தேதி காலை 11.25 மணிக்கு கோவை மாவட்டம் அன்னூர் வட்டம் வடக்கலூர் மின் வாரிய லைன் இன்ஸ்பெக்டர் இளங்கோ அவர்கள் அவருடைய செல் நெம்பர் 9976578126 ல் இருந்து எனது செல் நெம்பர் 9865228250 க்கு தொடர்பு கொண்டு மேற்படி எனது

விவசாய மின் இணைப்பு சம்பந்தமாக விசாரித்து விட்டு இது சம்மந்தமாக செலவு இருப்பதாகவும், அது தொடர்பாக வடக்கலூர் உதவி மின் பொறியாளர் ராஜேந்திரன் அவர்களை போனில் தொடர்பு கொள்ளும்படி கூறினார். அவர் சொன்னபடி நான் உதவி மின் பொறியாளர் அவர்களை தொடர்பு கொள்ளாததால், லைன் இன்ஸ்பெக்டர் இளங்கோ அவர்கள் அன்றையே தினமே மாலை சுமார் 05.45 மணிக்கு என்னை தொடர்பு கொண்டு ஏன் இன்னும் உதவி மின் பொறியாளர் அவர்களை தொடர்பு கொள்ளவில்லை என்றும், உடனே செல்போனில் தொடர்பு கொள்ளும்படி அறிவுறுத்தினார். ஆனால் அன்று எனக்கு வேலை இருந்ததால் நான் உதவி மின் பொறியாளர் ராஜேந்திரன் அவர்களை தொடர்பு கொள்ளவில்லை. அதனை தொடர்ந்து அடுத்த நாள் 13.03.2021 ஆம் தேதி மதியம் சுமார் 12.15 மணிக்கு உதவி மின் பொறியாளர் ராஜேந்திரன் அவர்கள் என்னை அவருடைய செல் நெம்பர் 9445396734 ல் இருந்து எனது செல் நெம்பருக்கு தொடர்பு கொண்டு எனது விவசாய மின் இணைப்பு பற்றி விசாரித்து விட்டு நேரில் வாங்க பேசவேண்டும் என்று கூறினார். நானும் அவரிடம் வருகின்ற திங்கட்கிழமை வருவதாக கூறினேன். அதன்படி 15.03.2021 ஆம் தேதி திங்கட்கிழமை மதியம் சுமார் 12.45 மணிக்கு உதவி மின் பொறியாளர் ராஜேந்திரன் அவர்களை அவர் கேட்டுகொண்டபடி அவரின் செல் நெம்பருக்கு நான் தொடர்பு கொண்டு தங்களை தற்போது நேரில் வந்து பார்க்க வரட்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர் தற்போது தான் திருப்பூருக்கு மீட்டிங் செல்வதாலும் அதை முடித்து வர லேட் ஆகும் என்றும் அதனால் அடுத்த நாள் செவ்வாய்கிழமை என்னை வரும்படி கூறினார். அதே நாள் மதியம் சுமார் 02.00 மணிக்கு லைன் இன்ஸ்பெக்டர் இளங்கோ அவர்கள் என்னுடைய செல் நெம்பருக்கு தொடர்பு கொண்டு ஏன் உதவி மின் பொறியாளரை பார்க்கவில்லை என்று கேட்டார். அதற்கு நான் லைன் இன்ஸ்பெக்டர் இளங்கோ அவரிடம் உதவி மின் பொறியாளர் அடுத்த நாள் வர சொன்ன விபரத்தை தெரிவித்தேன். மேலும் அவரிடம் மின் இணைப்பு பெறுவது சம்மந்தமாக பொருட்கள் ஏதாவது வாங்க வேண்டியது உள்ளதா என்று விபரம் கேட்டேன். அதற்கு அவர் பீஸ் கேரியர், ஒயர் போன்ற பொருட்கள் வாங்க வேண்டியது உள்ளது என்றும், அதற்கான பட்டியலை என்னுடைய வாட்ஸ் அப்பில் அனுப்பி வைக்கிறேன் என்று கூறி பொருட்களின் பட்டியலை அனுப்பினார். நானும் அவற்றை வாங்கி வைத்துள்ளேன். கடந்த 16.03.2021 ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை சுமார் 08.15 மணிக்கு உதவி மின் பொறியாளர் அவர்கள் எனது செல் நெம்பருக்கு தொடர்பு கொண்டு அவருடைய அலுவலகத்திற்கு நேரில் வரும்படி சொன்னார். அதன்பேரில் நானும் அன்று மாலை சுமார் 05.00 மணிக்கு

அன்னூர் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று உதவி மின் பொறியாளர் ராஜேந்திரன் அவர்களை சந்தித்து பேசினேன். அப்போது அவர் எங்களுடைய மின் இணைப்பு கொடுக்க வேண்டிய விவசாய பூமியை நேரில் பார்க்க வேண்டும் என்று கேட்டுகொண்டதன் பேரில் நானும் எனது Honda Amaze காரில் அவரை அழைத்து கொண்டு குப்பனூர் கிராமத்தில் எனது மனைவி ரேவதி பெயரில் உள்ள விவசாய பூமியை காண்பித்தேன். அப்போது அவர் என்னிடம் விவசாய பூமிக்கு தட்க்கல் முறையில் ஆழ்குழாய் கிணற்றுக்கு புதிய விவசாய மின் இணைப்பு பெற பணம் கொஞ்சம் செலவாகும் என்று கூறி என்னிடம் பணம் ரூ.15,000/— தனக்கு தனியாக தரவேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் ஏற்கனவே மின் இணைப்பு சம்மந்தமாக அரசுக்கு பணம் ரூ.2,75,000/— ஐ செலுத்தியுள்ளேன் என்று அவரிடம் கூறினேன். அதற்கு நீங்கள் பணம் ரூ.15,000/— கொடுத்தால் தான் உங்களுக்கு மின் இணைப்பு கிடைக்கவேண்டி தொடர்ந்து வேலைகளை செய்து முடிக்கமுடியும் என்று கராராக சொல்லி, மேற்படி பணம் ரூ.15,000/— அவருடைய லைன் இன்ஸ்பெக்டர் இளங்கோ அவர்களிடம் கொடுத்து விடும்படி என்னிடம் கூறினார். நானும் சரி என்று சொல்லி அங்கிருந்து அவரை திரும்ப காரில் அழைத்து கொண்டு அவருடைய அன்னூர் மின் செயற்பொறியாளர் அவலுகத்திற்கு அருகில் இறக்கி விட்டுவிட்டு நான் சென்றுவிட்டேன். பின்னர் அன்று மாலை சுமார் 06.30 மணிக்கு நான் எனது செல் நெம்பரில் இருந்து லைன் இன்ஸ்பெக்டர் இளங்கோ அவர்களுக்கு தொடர்பு கொண்டு உதவி மின் பொறியாளர் ராஜேந்திரன் அவர்கள் பணம் ரு.15,000/— கேட்ட விபரத்தை அவரிடம் சொல்லி உதவி மின் பொறியாளர் கேட்ட பணத்தை குறைக்க சொல்லும்படி கேட்டேன். அப்போது அவரும் உதவி மின் பொறியாளர் ராஜேந்திரன் அவர்கள் தன்னிடம் மேற்படி பணம் கேட்ட விபரத்தை கூறியதாகவும், பணத்தையெல்லாம் குறைக்க முடியாது என்றும், பணத்திற்கு செலவு இருப்பதாகவும், வேண்டும் என்றால் உதவி மின் பொறியாளரிடம் பேசி கொள்ளுங்கள் என்று கூறினார். மேலும் பணம் ரூ.15,000/— ஐ எடுத்து வந்து கொடுங்கள், நான் உங்கள் வேலையை தடைபடாமல் நடத்தி முடிக்க தான் பார்த்து கொள்வதாகவும் கூறினார். பின்னர் நேற்று 17.03.2021 ஆம் தேதி மதியம் சுமார் 01.15 மணிக்கு உதவி மின் பொறியாளர் ராஜேந்திரன் அவர்கள் என்னுடைய செல் நெம்பருக்கு தொடர்பு கொண்டு ஏன் நான் கேட்ட பணம் ரூ.15,000/— ஐ இன்று கொண்டு வந்து கொடுக்க வில்லை என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் சார் பணத்தை கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று வேண்டி கேட்டேன். அதற்கு அவர் பணத்தையெல்லாம் குறைக்க முடியாது என்றும் நீங்கள் பணம்

கொடுக்கவில்லை என்றால் மின் இணைப்பு கிடைக்க தடைபடும் என்றும் மிரட்டும் தோரணையில் பேசி லைன் இன்ஸ்பெக்டர் இளங்கோ அவரிம் பணத்தை நாளை காலை வந்து கொடுங்கள் என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார். அதற்கு நானும் வேறுவழியில்லாமல் சரி சார் என்று சொல்லி செல்போனை வைத்துவிட்டேன். அதன் பின்பு நான் யோசனை செய்ததில் எங்களது பெயரில் உள்ள விவசாய பூமிக்கு தட்க்கல் முறையில் ஆழ்குழாய் கிணற்றுக்கு புதிய விவசாய மின் இணைப்பு பெற அன்னூர் வட்டம், வடக்கலூர் மின் வாரிய உதவி மின் பொறியாளர் ராஜேந்திரன் மற்றும் லைன் இன்ஸ்பெக்டர் இளங்கோ அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.15,000/– ஐ எனக்கு கொடுக்க விருப்பம் இல்லை. எனவே லஞ்ச பணம் ரூ.15,000/– கேட்கும் அன்னூர் வட்டம், வடக்கலூர் மின் வாரிய உதவி மின் பொறியாளர் ராஜேந்திரன் மற்றும் லைன் இன்ஸ்பெக்டர் இளங்கோ ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன்.இப்படிக்கு, ஒப்பம் x/x/x/x/ (P.கனகராஜ், 18/3/2021) இடம் – கோவை, நாள் – 18.03.2021. Sir, Received the complaint on 18.03.2021 at 07.15 hrs Sd/- x-x-x-x 18.03.2021 (G.Arumugam), Inspector of Police, V&AC, Coimbatore. Sir, After conducting discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.11/2021/AC/CB u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 18.03.2021 at 07.45 hrs. Sd/- x-x-x-x 18/03/2021 (G.Arumugam), Inspector of Police, V&AC Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார்மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

18/3/2021

(G.ஆறுமுகம்)
காவல்ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.